DEPOSITION OF WITNESS.
(Chapter XXV, B.N.S.S)
IN THE COURT OF JUDICIAL MAGISTRATE, ANDIPATTI

Case No. CC.No. 268/2017
Deposition of PW 7/ LW8

| | | |
|---|---|---|
| Name | : | திரு. செந்தில்குமார் |
| Father's / Husband Name | : | லிங்கசாமி |
| Village | : | அவனியபுரம் |
| Taluk | : | மதுரை |
| Calling | : | உதவி காவல் ஆணையர் |
| Religion | : | இந்து |
| Age | : | 54 |

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the 09.04.2026

எதிரி ஆஜர்.

**முதல் விசாரணை :**

நான் தற்சமயம் மதுரை மாநகர் அவனியபுரம் சரகத்தில் உதவி காவல் ஆணையராக பணி புரிந்து வருகிறேன், கடந்த 12.01.2014 தேதி கடமலை குண்டு சரகம் மயிலாடும் காவல் நிலையத்தில் காவல் ஆய்வாளராக பணியில் இருந்து போது சார்பு ஆய்வாளர் சரவணன் பதிவு செய்த குற்ற எண் 5 / 2014 பிரிவுகள் 3 r/w 25 (1B ) Arms Act வழக்கை நான் எனது புலன் விசாரணைக்கு எடுத்து கொண்டு வழக்கின் எதிரி கைது செய்யப்பட்டு நீதிமன்ற காவலுக்கு அனுப்பி வைத்தேன், இவ்வழக்கின் சாட்சிகள் சுருளிராஜன், ராஜாபாண்டி, மோகன் முனியாண்டி ஆகியோர்களை விசாரணை செய்து வழக்கு சொத்துகளை படிவம் 91 மூலம் தயார் செய்தேன். கைப்பற்றப்பட்ட வழக்கு சொத்துகளை தடய அறிவியல் ஆய்விற்கு காவலர் வாசு என்பவரிடம் கடிதம் கொடுத்து அனுப்பினேன். இவ்வழக்கில் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்த சரவணன் என்பவரை விசாரணை செய்து வாக்குமூலம் பதிவு செய்தேன். பின்னர் நான் பணி மாறுதலில் சென்றதால் இவ்வழக்கு கோப்பினை ஆய்வாளர் சுதந்திரனிடம் ஒப்படைத்தேன். **படிவம் 91 அ.சா.ஆ.4** . நான் கொடுத்து அனுப்பிய **கடிதம் அ.சா.ஆ.5**

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை**

நான் சம்பவ தேதியான 12.01.2014 அன்று வழக்கை எனது புலன் விசாரணைக்கு எடுத்து கொண்டேன் என்றால் சரிதான். நான் சம்பவ இடத்திற்கு செல்லவில்லை என்றாலும் மகஜர் மற்றும் வரைபடம் தயார் செய்யவில்லை என்றாலும் சாட்சிகளை

விசாரணை செய்யவில்லை என்றாலும் சரியல்ல. நான் உண்மையிலேயே சம்பவ இடத்திற்கு சென்றிருந்தால் நான் ஆவணங்கள் தாக்கல் செய்திருப்பேன் நான் செல்லவில்லை என்பதால் தான் ஆவணங்கள் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. எதிரியிடம் இருந்து கைப்பற்றப்பட்டதாக செல்லப்படும் துப்பாக்கி மற்றும் வெள்ளை துணியை நீதிமன்றத்திற்கு எந்த தேதியில் நீதிமன்றத்திற்கு அனுப்பிவைத்தேன் என்றால் எதிரியை நீதிமன்ற காவலுக்கு உட்படுத்த தேதியான 12.01.2014 போதே துப்பாக்கி மற்றும் வெள்ளை துணியை நீதிமன்றத்தி்ல் ஒப்படைத்துவிட்டேன். வழக்கு கோப்புகளின் படி துப்பாக்கி மற்றும் வெள்ளை துணியானது வாசு என்ற காவலர் மூலம் 19.06.2014 தேதி சுமார் 5 மாதம் தமதமாக அனுப்பி வைக்கப்பட்டது என்றால் சரியல்ல இரசாயன பகுப்பாய்வுக்கு அனுப்பட்டதாகும். நான் இதுபோன்று வழக்கிற்காக பொய்யாக சொல்கிறேன் என்றாலும் 19.06.2014 தேதிதான் வழக்கு சொத்து நீதிமன்றத்தில் ஒப்படைக்கப்பட்டது என்று சொன்னாலும் சரியல்ல. நான் சொல்லவது போல் எதிரியிடம் துப்பாக்கி கைப்பற்றபட்டது என்றால் உடனடியாக நீதிமன்றத்தில் சமர்த்திருப்பேன் என்றாலும் அந்த காலயிடைவேளையில் இந்த வழக்கிற்கு ஏற்ப நான் போலியாக துப்பாக்கி தயார் செய்வதற்காக தான் மேற்படி காலதாமதம் ஏற்பட்டது என்றால் சரியல்ல. இந்த வழக்கின் சம்பவம் மதியம் 2.00 மணிக்கு நடந்தது என்று குறிப்பிட்டு சொன்னால் சரிதான். பொதுவாக மதியம் உணவு இடைவேளை என்றால் சரிதான். சம்பவம் நடந்ததாக செல்லப்படும் மன்னுத்து பாண்டி தோட்டத்திற்கு வருவாய் ஆய்வாளரும் கிராம நிர்வாக உதவியாளரும் அந்த நேரத்தில் என்ன வேலையாக வந்தார்கள் என்ற விபரம் விசாரணையில் தெரிந்து கொண்டீர்களா என்றால் அது குறித்து எனது விசாரணையில் எதுவும் தெரியவில்லை. இந்த வழக்கில் புகார்தாரர் ஒரு காவல் துறை அதிகாரி சாட்சிகள் காவலர்கள் என்பதால் இந்த பொய்யான வழக்கினை வலுப்படுத்தும்பொருட்டு வருவாய் ஆய்வாளரர் மற்றும் கிராம உதவியாளர் ஆகியோர்கள் காவல் நிலையத்திற்கு வரவழைத்து பொய்யான் ஆவணங்களை உற்பத்தி செய்துள்ளீர்கள் என்றால் சரியல்ல. சம்பவ இடத்திற்கும் காவல் நிலையத்திற்கும் சுமார் 15 கி.மீ என்று சொல்லப்பட்டுள்ளது என்றால் சரிதான். ரோந்து செல்லவதற்காக அ.சா.1 முதல் அ.சா.3 வரையான சாட்சிகள் ரோந்துக்கு காவல் நிலையத்தில் இருந்து எத்தனை மணிக்கு கிளம்பி சென்றார்கள் எந்த எந்த இடத்திற்கு சென்றார்கள் என்று காவல் ரோந்து குறிப்பேட்டில் பதிவு செய்யதது குறித்து விசாரணை செய்தீர்களா என்றால் அது குறித்து எனக்கு நினைவில் இல்லை. இது போன்று ரோந்து செல்வது குறித்து காவல் நிலைய பொது நாட்குறிப்பில் பதிவு செய்வது வழக்கமாக இருந்து வருகிறது என்றால் முக்கியமான தகவல் ஏதேனும் இருந்தால் தகவல் குறித்து பதிவு செய்வது வழக்கம். நான் வழக்கிற்காக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. இந்த வழக்கில் சார்பு

ஆய்வாளர் சரவணன் வழக்கு பதிவு செய்வதற்கு தனியாக புகார் எதுவும் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. மேற்படி புகார் மனுவை இந்த வழக்கின் ஆவணமாக தாக்கல் செய்யவில்லை என்றால் முதல் தகவல் அறிக்கையே அவர் தான் பதிவு செய்துள்ளார். முதல் தகவல் அறிக்கை நேரடியாக பதிவு செய்வதற்கு ஏதேனும் முன் அனுமதி பெற்றார என்றால் அவர் நிலை அதிகாரியாக இருப்பதால் அனுமதி தேவையில்லை . அ.சா.1 முதல் அ.சா.5 வரையான சாட்சிகளை விசாரனை செய்து நான்தான் வாக்குமூலம் பதிவு செய்தேன் என்றால் சரிதான். அந்த விசாரணையில் சாட்சிகள் வெடி சத்தம் கேட்டபின்பு சாட்சிகள் சென்ற வாகனத்தினை நிறுத்திவிட்டு எதிரியை பின்தொடர்ந்து சென்றதாக வாக்குமூலத்தில் செல்லியூள்ளர்களா என்றால் அது போன்று எதுவும் சொல்லவில்லை. அ.சா.1, அ.சா.2 முன்னிலையில் எதிரியிடம் இருந்து துப்பாக்கி கைப்பற்றப்பட்டதாக வாக்குமூலத்தில் அ.சா1, 2 சாட்சி கையொப்பம் பெறப்பட்டதாகவும் சொல்லப்பட்டது என்றால் இல்லை. இந்த வழக்கின் சாட்சி சார்பு ஆய்வாளரான இந்த வழக்கின் புகார்தாரரிடம் ஆஜர் எதிரியானவர் எதிர்த்து பேசி சட்டம் பேசியதாகவும் அதனால் தனி பட்ட முறையில் காழ்ப்புணர்ச்சி கொண்ட அ.சா.1 எதிரியை பலிவாங்க வேண்டும் என்ற நோக்கத்தில் பொய்யான முதல் தகவல் அறிக்கை பதிவு செய்தார் என்றும் தாங்களும் சார்பு ஆய்வாளருக்கு ஆதரவாக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. இந்த வழக்கில் தன்னிச்சையான சாட்சிகள் யாரும் விசாரிக்கப்படவில்லை என்றாலும் சாட்சிகள் அனைவரும் அரசு அலுவலர்கள் என்றால் சரிதான். இந்த வழக்கிற்கும் எதிரிக்கும் சம்பந்தம்மில்லை என்றால் சரியல்ல. எதிரி மீது பொய் வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றால் சரியல்ல.

**காணொலி காட்சி ( Video conferance ) மூலம் பதிவு செய்யப்பட்டது.**

**Coordinator by Typist R. Subalakshmi**

Taken down by me in the open court in the presence of accused read over to the witness and admitted by him to be correct

FAZIL MOHAMED H

Digitally signed by FAZIL MOHAMED H
Date: 2026.04.09 17:47:51 +0530

Judicial Magistrate,
Andipatti.